மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் இடையில் அந்தக் கருத்தைக் குறிப்பிட்டேன். இந்த ஆலோசனை வழங்கப்பட்ட நேரத்தில், அதுபற்றி இரண்டு விதமான கருத்து அந்தத் துறையினரிடமிருந்து வந்தது. டீப் எக்ஸ்ரே யூனிட் தான் சிறந்த முறையில் சிகிச்சை வழங்குவதற்கு ஏற்றதாக இருக்கும் என்ற கருத்தும், கோபால்ட் தரபி யூனிட் அந்த அளவு எளிதாகப் பயன்படுத்த முடியாது என்ற எண்ணமும் இருந்தது. மற்றும் அது இந்தியாவில் கிடைக்காது என்ற நிலையும் அது வரையில் இருந்தது. வெளி நாட்டுச் செலாவணிக்கு மத்திய அரசு 6, 7 ஆண்டு காலம் கழித்துத்தான் சம்மதம் வழங்குகின்ற நிலைமை ஏற்பட்டது. ஏற்கெனவே மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனைக்குக் கேட்கப்பட்ட ஒன்றுக்கு 63-ல் வேண்டுகோள் தொடங்கி, 1965–66-ல் ஏற்றுக்கொள்ளப் பட்டு, 1968ல் வற்புறுத்தப்பட்டு, 1973-ல் தான் அனுமதி கிடைத்திருக்கிறது. இந்தச் சிக்கல் காரணமாக கோபால்ட் தெரபியூனிட்டுக்கு அதிகக் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனால், அண்மையில் பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டர் தருகிற கோபால்ட் ரிசோர்ஸஸைப் பயன்படுத்தி பம்பாயிலுள்ள இண்டர்நேஷனல் ஜெனரல் எலெக்டிரிக் கம்பெனி, இந்த ஜேனஸ் கோபால்ட் தெரபியூனிட்டை உருவாக்கிய காரணத்தால், இதைப் பயன்படுத்தலாம் என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் இந்தத் துறையைச் சேர்ந்த, மருத்துவக் கல்லூரிகளில் போஸ்ட் கிராஜுவேட் படிப்பு உள்ள கல்லூரிகள் உள்ள மருத்துவ மனைகளில் கோபால்ட் தெரபி யூனிட் ஏற்படுத்தப்படவில்லை. அதைத் தொடர்ந்து மற்ற இடங்களில் ஏற்படுத்த முயற்சிக்கப்படும்.

Nuisance of Pigs in Residential Areas in Madras City.

*174. THIRU N. SUNDARESA THEVAR (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the nuisance of pigs in residential areas in Madras City ; and

(*b*) if so, the steps taken to eradicate this health hazard ?

சென்னை மாநகர் குடியிருப்புப் பகுதிகளில் பன்றிகளின் தொல்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில், குடியிருப்புப் பகுதிகளில் காணும் பன்றிகள் தொல்லையை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், சுகாதாரக் கேடான இதனை ஒழிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளைப் பிடிப்பதில் பயிற்சி பெற்ற குழுவின் மூலம் பன்றி வேட்டை நடத்துகிறது. பொது மக்களின் புகார் உடனடியாகக் கவனிக்கப்படுகிறது. மாநகராட்சி எல்லா வட்டங்களிலும் கால முறைப்படியான பன்றி வேட்டைகளை நடத்தி அதன் மூலமாகக் கட்டுப்படுத்திவருகிறது. பன்றிகள் முறைப்படி பிடிக்கப்பட்டு சாகடிக்கப்படுகின்றன.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, பன்றிகள் மட்டுமல்லாமல், நகரங்களில் இன்னும் தொல்லை கொடுக்கும் மிருகங்கள்—நாய் போன்றவை—இருக்கின்றன. பன்றிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதை விட்டு, மற்றவகைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படுமா என்ற அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாநகராட்சியோ அமைச்சரோ இதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. கேள்வி கேட்ட அங்கத்தினர் முக்கியத்துவம் கொடுத்துக் கேட்ட காரணத்தினால், பதில் தரப்பட்டுள்ளது.

புலவர் திரு. ஒ. அறிவுடைநம்பி : உயிர் வதை செய்யப்படுகிறது என்று சொன்னார்கள். 10 அவதாரங்களில் ஒன்றாக வராக அவதாரம் உள்ளது. அதை, உயிர்வதை செய்வதிலிருந்து தடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அவதாரம் அதற்குப் பின்னாலே இருந்ததாகச் செய்தியில்லை. அதுவும் ஒரு கால கட்டத்தில் முடிந்து இருக்கிறது. ஆகவே, முடிந்துபோன அவதாரங்களை வைத்துக்கொண்டு இருக்கின்ற எல்லா உயிரினங்களையும் காப்பாற்ற முடியாது.

Thanjavur Medical College.

@93. Q. Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to stat—

(*a*) the number of Assistant Professors and Tutors working in the English and Statistics Departments of the Thanjavur Medical College ;

(*b*) the total work-load of the Departments -;

(*c*) whether the staff in each Department is in excess, when compared to the work-load ; and

(*d*) if so, the action proposed to be taken by the Government in the matter ?

@ 24—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.